தமிழ்

sam
singaporeartmuseum
CONTEMPORARY ART IN SOUTHEAST ASIA

# LEARNING GALLERY


2 ஆகஸ்ட் 2025 - 28 ஜூன் 2026
தஞ்சோங் பகார் டிஸ்ட்ரிபார்க்

## உள்ளகத்தில் இருக்கும் குழந்தைக்கு

கலையும் குழந்தைப் பருவமும் ஓர் இயல்பான தொடர்பைப் பகிர்ந்து கொள்கின்றன. இரண்டுமே கட்டற்ற தன்மை, ஆர்வம் மற்றும் அச்சமற்ற பேராய்வு ஆகியவற்றை உள்ளடக்கியவை. நம்மில் பலர் குழந்தைகளாக இருக்கும்போதுதான் நம் முதல் கலைப்படைப்பை உருவாக்குகிறோம், அந்நேரத்தில்தான் நாம் உலகத்தைப் பற்றி அறிந்துகொண்டு நம் உணர்ச்சிகள், நம்பிக்கைகள் மற்றும் நினைவுகளை வடிவமைக்கிறோம். அப்படிப்பட்ட குழந்தைத்தனமான மனப்பான்மைக்குத் திரும்பி, கண்டுபிடிப்புகளை ஏற்கும் திறந்த மனத்துயுடையவர்களாகவும், புதிதாக ஏதாவது ஒன்றை முயல அஞ்சாதவர்களாகவும் இருந்தால் எப்படி இருக்கும்?

கற்றல் காட்சிக்கூடத்தின் (learning gallery) இந்த இரண்டாம் பதிப்பு, அன்றாட வாழ்விற்கு அப்பால் பார்ப்பதற்கு உங்களை அழைக்கிறது. வாய்ப்புக்கூறுகளை ஆழ்ந்து ஆராயுங்கள், உதிக்கும் பல்வேறு எண்ணங்களைக் கொண்டு பல்வேறு பொருள்களுடன் ஆராய்ச்சி செய்யுங்கள் மற்றும் பழக்கமான செயல்பாடுகளுக்கு வெளியே துணிந்து முயலுங்கள்.

இங்குள்ள கலைப்படைப்புகள் பல்வேறு ஊடகங்களில் பரவி, அடையாளம், இருப்பிடம், இயற்கையும் சுற்றுச்சூழலும், மக்களும் இடங்களும், வெளிகளும் நினைவுகளும் ஆகிய கருப்பொருள்களை ஆராய்கின்றன. அவை வாழ்க்கையைப் பற்றிய பொருளுள்ள கேள்விகளைக் கேட்கின்றன, மேலும், சமகாலக் கலையைப் பார்ப்பதற்கும் புரிந்துகொள்வதற்கும் புதிய வழிகளைத் தூண்டுகின்றன.




1. ஹான் சாய் போர்
*புகலிடம்*
*நிலச்சீரழிவு*

2. ஹான் சாய் போர்
*கறுப்புக் காடு*

3. டேவிட் சான்
*விலங்குக்குறிச் சுழல்பலகைச் சூதாட்டம்*

4. இங்குவான்
*பெயரிடப்படாதது, 'சிங்கப்பூர்' தொடரில் இடம்பெற்றது.*

5. எஸ்ஸாம் ரஹ்மான்
நான் யார் என்பது இதுதான், நீங்கள் பார்ப்பது நான் தான்.

6. சென் சாய் ஹுவா குவான்
வெளியின் வரைபடம் 5

7. சென் சாய் ஹுவா குவான்
வெளியின் வரைபடம் 14

8. நிகழ்ச்சிகளின் மூலை
மேகக்கணிமை நூலகம்
மறு-பொருள்

9. இருவழித் தொடர்பாடு சுவர்

## 1 ஹான் சாய் போர்
## *புகலிடம்*
## *நிலச்சீரழிவு*

2009
காகிதத்தில் மை
ஓவியரின் திரட்டு

இப்படைப்புகளில், ஹான் சாய் போர் அவர்கள், தென்கிழக்கு ஆசியா முழுவதும் நிகழும் காடழிப்பு மற்றும் அதன் விளைவாக ஏற்படும் விலங்குகளின் வாழ்விடயிழப்பு போன்ற சுற்றுச்சூழல் சீரழிவைப் பற்றிப் பேசுகிறார். இயற்கையுடனான அவரது தீவிர ஈடுபாடு, இந்த அழுத்தமான சிக்கல்கள் மீது அவருக்கு வாழ்நாள் முழுவதும் இருக்கும் அக்கறையிலிருந்து உருவாகிறது, இயற்கை உலகத்துடனான நமது வளர்ந்து வரும் உறவு குறித்த ஆற்றல்வாய்ந்த விளக்கத்தை வழங்குகிறது.

சிங்கப்பூர், இந்தோனேசியா மற்றும் மலேசியா உள்ளிட்ட தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வேகமாகக் குறைந்து வரும் வெப்பமண்டல மழைக்காட்டுச் சுற்றுச்சூழல் அமைப்புகள் குறித்து, 2009 ஆம் ஆண்டில் ஹான் தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டார். பொதுக் குடியிருப்பு வீடுகளை ஏற்படுத்திட இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட அவரது குழந்தைப் பருவக் கிராம வீட்டின் நினைவுகள் இப்படைப்புகளுக்கு உந்துதலாக அமைந்தன. ஹானின் முயற்சிகள் விமர்சனப் பார்வைகளை உருவாக்கி, புகலிடம் மற்றும் நிலச் சீரழிவு ஆகிய படைப்புகளின் முக்கிய உள்ளடக்கங்களை உருவாக்கின. இரண்டு படைப்புகளும் இயற்கையை நேர்த்தியாகவும் கவனமாகவும் ஒழுங்கமைக்கப்பட்ட காட்சிகளாகக் காட்டாமல், அதனை அதன் ஒப்பனையற்ற, உண்மையான நிலையில் காண்பிப்பதன் வழியாக அவை இயற்கையின் வழக்கமான காட்சிப்படுத்தல்களுக்கு அறைகூவல் விடுக்கின்றன.

*புகலிடம், சிற்ப வடிவத் தண்டுகளையும், இலைகளகற்றப்பட்ட கிளைகளையும் கொண்ட காடொன்றை ஒற்றை நிறத்தில் சித்தரிக்கிறது. கறுப்பு, வெள்ளை மற்றும் சாம்பல் நிறங்களின் தொனித் தரத்தில் கழுவப்பட்ட இப்படைப்பு, ஒரு காலத்தில் பல்லுயிர் வளம் நிறைந்த ஓரிடத்தின் பாழடைந்த நிலையை ஆற்றல்வாய்ந்த முறையில் எண்ணிப்பார்க்கத் தூண்டுகிறது. பசுமையே முற்றிலும் இல்லாமல் இருப்பது, கட்டுமானங்களால் ஏற்பட்ட மனித நடவடிக்கைகளின் பெரிய அளவிலான தாக்கத்தையும், காலநிலை மாற்றத்தால் பரவிய சுற்றுச்சூழல் அச்சுறுத்தல்களையும் குறிக்கிறது.*

*நிலச் சீரழிவு, புவியில் ஊன்றிப் பற்றியிருக்கும் மரங்களை அகற்றி வெறுமையாக்குவதன் தொடர்பில் பார்வையாளர்களின் முன் எதிர்த்து நிற்கிறது. இப்படைப்பு கரடுமுரடான, அடர்த்தியான மண் அமைப்புகளையும் அதன் பொருட்தன்மையையும் பெரிதாக்கிக் காட்டுகிறது. இதன் விளைவாக உருவான தளர்வான, துகள்கள் நிறைந்த புவியை நீர் அலை வடிவங்களாகச் செதுக்கி, அதன் மேற்பரப்பு முழுவதும் ஆழமான முகடுகள், விரிசல்கள் மற்றும் பள்ளங்களை பொறித்துள்ளது. காடழிப்பால் ஏற்படும் மண் அரிமானச் சிக்கலின்மீது இப்படைப்பு நேரடியாகக் கவனம் செலுத்துகிறது. மனிதத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதென்பது அத்தகைய சுற்றுச்சூழல் அழிவை நியாயப்படுத்துமா என்று பார்வையாளர்களைக் கேள்வி கேட்க வைக்கிறது.*

## 2 ஹான் சாய் போர் *கறுப்புக் காடு*

2024
மரம் மற்றும் கரி
ஓவியரின் திரட்டு

*'கறுப்புக் காடு' என்பது ஹான் சாய் போர் அவர்களால் 2011 இல் தொடங்கப்பட்டு, 2013 மற்றும் 2016இல் மீண்டும் பார்வையிடப்பட்ட ஒரு தொடர்ந்து படைக்கப்பட்டுவருகிற படைப்பாகும்.*

*இந்த 2024 பதிப்பு, இயற்கை உலகில் மனித நடவடிக்கைகளின் ஆழமான தாக்கத்தை ஆராய்வதில் ஹானின் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும். இந்நிறுவல் அழிக்கப்பட்ட காடுகளின் ஒரு குறிப்பிடத்தக்க காட்சியினூடாக இடைவிடாத காடழிப்பின் நீங்காப் பின்விளைவுகளைக் காட்டுகிறது. கூர்ந்து கவனித்தால், சில கிளைகள் எரியாதவையாகத் தோன்றும். மனிதகுலத்தால் அழிவுத்தன்மை இருந்தபோதிலும், இயற்கைக்கு இருக்கும் உள்ளார்ந்த மீள்தன்மையை இக்கிளைகள் தெரிவிக்கின்றன.*

*அழகியலுக்கு அப்பால், ஹானின் படைப்புகள் மனிதனின் காட்டு மேலாண்மை குறித்தும் சுற்றுச்சூழலின் நீடித்த உணர்வு குறித்தும் ஆற்றல்வாய்ந்த விமர்சனங்களை வழங்குகின்றன.*

## 3 டேவிட் சான் *விலங்குக்குறிச் சுழல்பலகைச் சூதாட்டம்*

2005
பிளாஸ்டிக்காலான பொம்மை விலங்குகள், பசை, அக்ரிலிக் பிரிப்பான்கள் மற்றும் உறை, மரப் பெட்டி மற்றும் பிளாஸ்டிக்காலான அச்சிடப்பட்ட பெயர் ஒட்டுவில்லைகள்

மார்க் கோஹ் & குய்லூம் லெவி-லம்பேர்ட்டின் பரிசு, 'MaGMA'வின் திரட்டு

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டு

மரபான ஓவியத்திற்கு அப்பாற்பட்ட ஒரு காட்சி மொழியை நாடுவதன் போக்கில், டேவிட் சான், அடிப்படையான வெட்டி ஒட்டுதல் செயல்முறையை ஒரு கருத்தியல் செயல்முறையாக மாற்றுகிறார். பொம்மை விலங்குகளைக் கொண்டு முறையாகப் பணிசெய்து, அவற்றை அவற்றின் அசல் அடையாளங்களிலிருந்து பிரிக்கப்பட்ட பொருள்களாக மறுகட்டமைத்து மறுகற்பனை செய்கிறார்.

*விலங்குக்குறிச் சுழல்பலகைச் சூதாட்டம் என்கிற இப்படைப்பு, வண்ணங்கள், வடிவங்கள், உருவங்கள் மற்றும் கதைகளால் ஈர்க்கப்பட்ட கற்பனை உயிரினங்களின் வகைப்பாட்டை முன்வைக்கிறது. நல்வாய்ப்புக்கான விளையாட்டைப் பிரதிபலிக்கும் இப்படைப்பு, எல்லையற்ற மற்றும் சீரற்ற வாய்ப்புக்கூறுகளை உருவாக்குகிறது. ஒவ்வோர் உயிரினமும் ஒரு தனித்துவமான பெயரையும் அடையாளத்தையும் கொண்டுள்ளது, இது பகிரப்பட்ட இருப்புக்கான பட்டியலில் தனித்துவமான அடையாளங்கள் எவ்வாறு இணைந்து வாழக்கூடும் என்பதை எண்ணிப்பார்க்குமாறு பார்வையாளர்களை அழைக்கிறது.*

இப்படைப்புத் தொடரானது விலங்குகளின் இயல்பு மற்றும் மரபணுக் கையாள்கையின் நெறிமுறைச் சிக்கல்களை ஆராயும் சென்னின் தொடக்கக்காலப் படைப்புகளில் ஒன்றாகும். ஐந்து காட்சி நிகழ்வுகளில் மூன்று நிகழ்வுகள் இங்கே கற்றல் காட்சிக்கூடத்தில் வழங்கப்பட்டுள்ளன. காலப்போக்கில், விலங்குகளில் ஏற்படும் மரபணு மாற்றங்களைச் சமூகம் குறைவான அச்சத்துடன் பார்க்கும்போது, இப்படைப்பு இன்னும் பொருத்தமானதாகவே உள்ளது, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சமூகம் ஆகியவை குறுக்கிடும்போது எழும் கவலைகளை நமக்கு நினைவூட்டுகிறது.

**4**

## இங்குவான்
## பெயரிடப்படாதது, 'சிங்கப்பூர்' தொடரில் இடம்பெற்றது.

2013
காப்பகத் தர நிறிமி அச்சு

## பெயரிடப்படாதது, 'சிங்கப்பூர்' தொடரில் இடம்பெற்றது.

2013
காப்பகத் தர நிறிமி அச்சு

## பெயரிடப்படாதது, 'சிங்கப்பூர்' தொடரில் இடம்பெற்றது.

2013
காப்பகத் தர நிறிமி அச்சு

## பெயரிடப்படாதது, 'சிங்கப்பூர்' தொடரில் இடம்பெற்றது.

2012
காப்பகத் தர நிறிமி அச்சு

## பெயரிடப்படாதது, 'சிங்கப்பூர்' தொடரில் இடம்பெற்றது.

2011
காப்பகத் தர நிறிமி அச்சு

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டு

இடப்புறத்திலிருந்து வலப்புறம்

'சிங்கப்பூர்' தொடரில், சிங்கப்பூரின் தெருக்களில் நிகழும் அமைதியான, அன்றாடக் காட்சிகளையும், நகரத்தில் பரவியுள்ள அயல்தன்மையையும் தனிமை உணர்வையும் இங்குவான் வெளிப்படையாகப் படம்பிடித்துள்ளார்.

கால் நடையாகவே சிங்கப்பூரைச் சுற்றிப் பார்க்கும்போது, தென்படும் அயலார்களின் தன்னிச்சையான உருவப்படங்களைப் படமெடுத்து, அவர் சாதாரண வாழ்க்கையின் கவனிக்கப்படாத அம்சங்களை முன்வைக்கிறார். "அனைத்திடங்களிலும், தனிமை என்பது நவீன வாழ்க்கையின் வெறும் அறிகுறி ஆகும், நாம் முன்பை விட மிகவும் நெருக்கமாக வாழ்கிறோம், ஆனால் மேலும் அதிகமாக விலகியே உணர்கிறோம்" என்று இங்குவான் முன்பொருமுறை கூறினார்.

இத்தொடரில் ஆராயப்பட்ட கருப்பொருள்கள் இருண்டவையாகவும் மென்மையானவையாகவும் உள்ளன, அவை ஏக்கம் மற்றும் அரவணைப்பு உணர்வை வெளிப்படுத்துகின்றன. இப்புகைப்படங்களில், பன்னிரு எண்ணிக்கையிலான சொல்லப்படாத கதைகள் மற்றும் தனிப்பட்ட வரலாறுகள் வெளிவரக் காத்திருக்கின்றன.

**5**

## எஸ்ஸாம் ரஹ்மான்
## *நான் யார் என்பது இதுதான், நீங்கள் பார்ப்பது நான் தான்.*

2015
ஓவியரின் தோல் மற்றும் நகங்கள், பிசின், பயன்படுத்தப்பட்ட தளபாடங்கள் மற்றும் கண்ணாடியிலான மணிவடிவ ஜாடிகள்

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டு

முதல் பார்வையில், மென்மையான பூக்கள் கண்ணாடி உறைகளுக்கு அடியில் அமர்ந்திருக்கின்றன, மென்மையான ஒளியுடன், கோயில் குவிமாடங்கள் போல வடிவமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் அழகு உங்கள் கண்ணை ஈர்க்கிறது. ஆனால் நெருக்கமாகப் பாருங்கள், அவற்றின் பொருள்கள் வேறு கதையைச் சொல்கின்றன.

இந்நிறுவலில், எஸ்ஸாம் ரஹ்மான் இரண்டு மர மேசைகளில் புதைபடிவப் பூக்களை வழங்குகிறார், இஃது அவரது அசல் படைப்பான 'ஐந்து மேசைகள்' என்பதைத் தழுவி எடுக்கப்பட்டது. கலைஞர் ஒவ்வோர் இதழையும் ஒரு வழக்கத்திற்கு மாறான ஊடகத்திலிருந்து உருவாக்கினார்: எடுத்துக்காட்டாக, இறந்த தோல் - அதை அவர் தனது கால்களிலிருந்து சுரண்டி உரித்தெடுத்தார். பொருள் மற்றும் காலம் பற்றிய தனது ஆய்வின் மூலம், எஸ்ஸாம் இத்தடிமனான, கரடுமுரடான தோல் (சீர்ப்படுத்தலின் கழிவுகள்) அர்த்தமுள்ள ஒரு பொருளாக இருக்கலாம் என்பதைக் கண்டறிந்தார். அஃது அவரது இருப்பின் எச்சமாக மாறியது. இத்தகைய வழக்கத்திற்கு மாறான பொருள்களைப் பயன்படுத்துவதன் மூலம், எஸ்ஸாம் விதிமுறைகளுக்கு அறைகூவல் விடுக்கிறார் மற்றும் ஒரு கலை ஊடகமாகக் கருதக்கூடியவற்றின் எல்லைகளை விரிவுபடுத்துகிறார்.

இம்மலர்கள் நிகழ்காலத்தின் நிலையற்ற அழகையும், காலப்போக்கில் மங்கிப்போகும் அழகையும் எடுத்துக்காட்டுகின்றன. உடல் இனி இல்லாதபோது, வெறும் நினைவுகளையும் அடையாளக் கருத்தையும் மட்டும் எதிர்கொள்ள ஓர் உள்மனத்தாய்வுப் பயணத்திற்கு அவை நம்மை அழைக்கின்றன. நமது உடல்கள் சிதைந்து மண்ணுக்குத் திரும்பினாலும், நமது வாழ்க்கையும் நோக்கமும் எவ்வாறு நிலைத்திருக்கும் என்பதைக் கருத்தில் கொள்ள இப்படைப்பு நம்மைத் தூண்டுகிறது.

அதன் உடனடி கருப்பொருளுக்கு அப்பால், படைப்பு அதன் நிகழ்த்துகலைத்தன்மை மூலம் நம்மை ஈடுபட வைக்கிறது. அவ்வப்போது ஒருவரின் தோலை வெட்டுவதும், அத்தகைய வேண்டுமென்றே செய்யப்படும் செயல்முறையுடன் பின்னிப் பிணைந்த உணர்வுகளும், இந்தக் கணம் மற்றும் இப்புவியில் நமக்கிருக்கிருக்கும் வரையறுக்கப்பட்ட நேரம் பற்றிய ஆழமான பாராட்டுக்கு வழிவகுக்கிறது.

## 6 சென் சாய் ஹுவா குவான் *வெளியின் வரைபடம் 5*

2009
காணொளி, ஒற்றை ஒளிவழி,
1 நிமிடம் 3 நொடிகள்
சிங்கப்பூர் கலை அருங்பொருளகத்தின் திரட்டு

## 7 சென் சாய் ஹுவா குவான் *வெளியின் வரைபடம் 14*

2025
மீள்தன்மை கொண்ட பங்கீ கயிறு மற்றும் துருப்பிடிக்காத எஃகால் ஆன துளைக்கொண்டைத் திருகாணி

ஓவியரின் திரட்டு

சாய் என்றும் அழைக்கப்படும் சென் சாய் ஹுவா குவான், தஞ்சோங் பகார் டிஸ்ட்ரிபார்க்கில் உள்ள சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் கற்றல் காட்சிக்கூடத்திற்குப் பதிலளிக்கும் வகையில் 'வெளியின் வரைபடம் 14'-ஐ உருவாக்கினார். இப்படைப்பு அவரது " வெளியின் வரைபடம் " தொடரின் ஒரு பகுதியாகும், இதில் ஓவியர் ஒரு கோட்டின் செயல்பாட்டையும் வரைதல் செயலையும் வழக்கமான இரு-பரிமாண ஊடகத்திற்கு அப்பால் முப்பரிமாண இடஞ்சார்ந்த சூழல்களுக்கு விரிவுபடுத்துவதன் மூலம் மறுபரிசீலனை செய்கிறார்.

அருகிலுள்ள துறைமுகத்தின் செயல்பாடுகளை ஆதரிப்பதற்காக முதலில் உருவாக்கப்பட்ட 'டிஸ்ட்ரிபார்க்', துறைமுக நடவடிக்கைகள் இடம்பெயர்ந்ததால், அதன் தொழில்துறைக் கடந்த காலத்தைக் கலைகளுடன் கலப்புசெய்த ஒரு துடிப்பான இடமாக மாறியது. அது சமகாலக் கலை ஆய்வுமுயற்சிகள் மற்றும் கண்காட்சிகளுக்கான ஒரு முக்கிய இடமாக மாறியுள்ளது. சிங்கப்பூரின் வளர்ந்து வரும் நகரக் காட்சிக்கு எதிராக, கற்றல் காட்சிக்கூடத்தில் உள்ள 'வெளியின் வரைபடம் 14' கோடுகளின் இடைப்பின்னலால் உருவானதாக வெளிப்படுகிறது.

சாய் வெளிக்கு எதிர்வினையாற்றி, அதை ஒரு கித்தானாக மாற்றுகிறார். ஒரு தொடர்ச்சியான பங்கீ கயிற்றை ஒரு கோடாகப் பயன்படுத்தி (கோடென்பது ஓவியத்தின் அடிப்படையான, பலப்பயன்கொண்ட உறுப்பாகும்), அதன் வரையறைகளைப் பின்பற்றுவதன் மூலம் காட்சிக்கூடத்தைக் கடந்து குறுக்கிடும் ஒரு பாதையை அவர் உருவாக்குகிறார். இப்பாதை, தாளம் மற்றும் ஓட்ட உணர்வை உருவாக்க இறுக்கமாக நீட்டப்பட்ட ஓர் இடஞ்சார்ந்த வரைபடமாக மாறுகிறது. இரண்டு முனைகளும் பாதுகாப்பாக இணைக்கப்பட்டிருந்தாலும், இந்த இடைநிறுத்தப்பட்ட ஆற்றல், ஆர்வத்தையும் கற்பனையையும் தூண்டும் ஒரு மையப் புள்ளியாக மாறி, மறைந்திருக்கும் ஆற்றலையும் உணரப்படாத இயக்கத்தையும் பரிந்துரைக்கிறது, இவை ' வெளியின் வரைபடம் 5'-இல் அவர் முதலில் ஆராய்ந்த வாய்ப்புக்கூறுகள் ஆகும்.

இந்த அணுகுமுறை அவரது முந்தைய படைப்பான வெளியின் வரைபடம் 5 (2009)-ஐ அடிப்படையாகக் கொண்டது, ரஷ்யாவின் கலினின்கிராட்டில் உள்ள ஒரு கட்டுமானத் தளத்திற்காக அவர் இதை உருவாக்கினார். அங்கு, சாய் ஒரு மீட்சித்திறன்கொண்ட வடத்தை விடுவிப்பதற்கு முன்பு பாழடைந்த இடத்தில் நீட்டினார். அவர் அதை விடுவித்தவுடன், சேமிக்கப்பட்ட ஆற்றல் ஓர் இயக்கவியல் மற்றும் ஒலியியல் காட்சியாக மாறியது, விடுவிக்கப்பட்ட தண்டு தளம் முழுவதும் பாய்ந்து அதன் சுற்றுப்புறங்களுக்குக் கவனத்தை ஈர்த்தது.